Arimaa Nokku


# அரிமா நோக்கு

12:4 சனவரி 2019

₹ 30

ISSN 2320-4842

ஆசிரியர் : ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

# திருவள்ளுவர் மாவட்ட வட்டார வழக்கின் புணர்ச்சிச் சொற்கள்

வா. வினோத்

எழுத்துமொழி பல்வகையாக வளர்ந்த ஒரு சமூகத்தில் உள்ள வட்டார வழக்குகள் அச்சமூகத்தின் மரபுகளைப் பறைசாற்றும் கருவிகளாகத் திகழும். சமூக வரலாற்றிற்கும் ஒரு வகையான ஆதாரங்களாக விளங்கும் அத்தகைய சொல் வழக்குகளைப் பதிவுசெய்து ஆய்வுசெய்வது தற்காலத்தின் தேவையாக உள்ளது. இலக்கண நோக்கிலும் மொழியியல் நோக்கிலும் வட்டார வழக்குகளை ஆய்வுசெய்கையில் மொழியின் மரபுகளையும் சிறப்புகளையும் இன்னும் தெளிவாக உணர முடியும்.

இக்கட்டுரை திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சில விவசாய கிராமங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வட்டாரச் சொற்களுள் சிலவற்றை எடுத்துக்கொண்டு, அவற்றின் சொற்புணர்ச்சித் தன்மைகளை மேலெழுந்தவாரியாக ஆராய்கின்றது. இக்கட்டுரை மரபிலக்கணம், தற்கால இலக்கணம், மொழியியல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொள்கின்றது. இக்கட்டுரை பதிவு செய்துள்ள வட்டாரச் சொற்கள் பெரும்பாலும் தொகைப்பெயர்கள்; பெயரோடு விகுதிகள் இணைந்த சொற்களை, இக்கட்டுரை எடுத்துக்கொள்ளவில்லை. (குறிப்பு: இனி வரும் பகுதிகளில் இடம்பெறும் வட்டாரச்சொற்களின் பொருள்களையும் இலக்கணக் குறிப்புகளையும் கட்டுரையின் இறுதியில் உள்ள சொல்லடைவில் காண்க. சுருக்கக் குறியீடுகளுக்கான விரிவாக்கங்களையும் அச்சொல்லடைவிற்குமுன் காண்க)

**தோன்றல், திரிதல், கெடுதல்**

திருவள்ளூர் மாவட்ட வட்டார வழக்கில் உள்ள தொகைச்சொற்களுள் தோன்றல் புணர்ச்சி கொண்ட சொற்கள் அரிதாகக் காணப்படுகின்றன.

***சா. 1: வ.சொ - பொட்டுத்தன்னி ; எ.சொ - பொட்டுத்தண்ணீர் (பொட்டு + தண்ணீர்)***

***சா. 2: வ.சொ - இந்நேத்திக்கு ; எ.சொ - இந்நேரத்திற்கு (இ + நேரத்திற்கு)***

***சா. 3: வ.சொ - எந்நேத்திக்கு ; எ.சொ - எந்நேரத்திற்கு (எ + நேரத்திற்கு)***

முதல் சான்றில் வல்லின ஒற்றுத்தோன்றலையும் அடுத்த சான்றுகளில் மெல்லின ஒற்றுத்தோன்றலையும் காணமுடிகிறது. மேலும், இரண்டாம் மூன்றாம் சான்றுகளில் இகரச் சுட்டெழுத்தும் எகர வினா எழுத்தும் பெயரோடு இணைந்து, அவ்வெழுத்துக்கள் அவ்வாறே பயன்படுவது குறிப்பிடத்தக்கது.

சுட்டெழுத்தும் பெயரும் இணைந்த பயன்பாடு பழந்தமிழ், இடைக்காலத்தமிழ் ஆகிய காலங்களில் பொதுவாகவும் தற்காலத்தமிழின் எழுத்து வடிவங்களிலும் காணலாம் (தொல், எழு. புள்ளி மயங்கியல், 3); ஆனால், தற்காலப் பொதுப் பேச்சுத்தமிழில் காண முடியாது. இத்தகைய புறச்சுட்டெழுத்துப் புணர்ச்சியை திருவள்ளூர் மாவட்ட வட்டார வழக்கு கொண்டிருப்பதை இங்குக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

திரிதல் புணர்ச்சிக்கும் குறிப்பிட்ட வட்டாரச்சொற்கள் கிடைத்துள்ளன.

***சா. 4: வ.சொ - நேரங்கெட்ட நேரம் (நேரம் + கெட்ட + நேரம்)***

***சா. 5: வ.சொ - ஓரங்கழி (ஓரம் + கழி)***

***சா. 6: வ.சொ - பள்ளத்தலை (பள்ளம் + தலை)***

நான்காம், ஐந்தாம் சான்றுகளில், வருமொழி வல்லினத்துக்கு ஏற்ற மெல்லினத் திரிதலையும் ஆறாம் சான்றில் வருமொழி வல்லினத்துக்கு ஏற்ற வல்லினத் திரிதலையும் காண முடிகின்றது. இத்திரிதல் புணர்ச்சியும் மரபுத்தமிழின் தொடர்ச்சியே (தொல். எழு. புணரி. 7, நன். எழு. 154).

**புறநடை**

***சா. 7: வ.சொ - தெம்படு ; எ.சொ - தென்படு (தென் + படு)***



Arimaa Nokku

17 : 3 அக்டோபர் 2023

ISSN 2320-4842

# அரிமா நோக்கு

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842



# ஜி.யு. போப்பின் திணைசார் கருத்து

**முதுமுனைவர் வினோத். வா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தாகூர் அரசுக் கலை அறிவியல் கல்லூரி
புதுச்சேரி 605 008

## முன்னுரை

ஜார்ஜ் அக்லோ போப் தன் ஆங்கில மொழிபெயர்ப்பில் குறளின் கருத்தைத் தவறாகக் கூறிவிட்டார் என்ற வலுவற்ற விமர்சனத்திற்கு வலுவான மறுப்புரைகள் அளிக்கப்பட்ட காலம் இது[1]. அவர் தமிழ்ச்சொல் இலக்கணம் பற்றி எழுதும்பொழுது, 'உயர்திணை, அஃறிணை என்ற திணை இலக்கணத்தைப் பார்க்கத் தேவையில்லை[2]' என்ற ஒரு கருத்தைக் கூறியுள்ளார். எதிர்காலத்தில் இக்கருத்தும் விமர்சிக்கப்படக்கூடிய கருத்து ஆகும். எனவே, இக்கருத்தை, போப் ஏன் கூறினார்? இக்கருத்தின்வழி, போப்பிடம் இருக்கும் திணை தொடர்பான கருத்து என்ன? என்ற வினாக்களுக்கான விடையாக, இக்கட்டுரை அமைகின்றது. ஜி.யு. போப் கூறிய அக்கருத்து இடம் பெற்ற அவரின் நூலைப்பற்றி உரைத்துவிட்டு, அக்கருத்தைப்பற்றிச் சற்று விரிவாக இக்கட்டுரை ஆராய்கின்றது. (குறிப்பு: அடிக்குறிப்புகளை இக்கட்டுரை இறுதியில் காணலாம். மேலும், கட்டுரையில் ஆங்காங்கே ஒரே அடிக்குறி எண் தென்பட்டால், அது குறிபெற்ற கருத்துகள் ஒரே அடிக்குறிப்பைச் சார்ந்தவை என்பதை நினைவில் கொள்க.)

## தமிழ் இலக்கணச் சுருக்கம்

அடிப்படையான பேச்சுத்தமிழையும் எழுத்துத்தமிழையும் கற்ற ஐரோப்பியர்கள் தமிழின் அடிப்படை இலக்கணத்தை அறிந்துகொள்வதற்காக, 1842இல் ஜார்ஜ் அக்லோ போப் 'தமிழ் இலக்கணச்சுருக்கம்' என்ற சிறிய நூலைப் படைத்தார். தன் காலமான 19ஆம் நூற்றாண்டில் பண்டிதர்களிடம் காணப்பட்ட நன்னூல் தழுவிய இலக்கணத்தையும் அதே காலத்தில் வளர்ந்திருந்த மொழியியல் அறிவையும் துணைக்குக் கொண்டு, இந்தக் குட்டி இலக்கணத்தை வெளியிட்டுள்ளார்.

## நூலின் அமைப்பு

இந்த நூல் வினா-விடை வடிவத்தில் அமைந்துள்ளது; ஒரு பக்கம் தமிழிலும் அடுத்த பக்கம் ஆங்கிலத்திலும் அடிப்படை இலக்கணங்களை விளக்கிச் செல்கின்றது; எழுத்திலக்கணம், சொல் இலக்கணம், தொடர் இலக்கணம் ஆகிய மூன்று இலக்கணங்களைச் சுருக்கமாகக் கூறுகின்றது. இது மொத்தம் 81 பக்கங்களைக் கொண்டது.

## நூலின் உள்ளடக்கச் சிறப்புகள்

ஜி.யு. போப் ஐரோப்பா நாட்டினர் என்பதால், அவருக்கு இயல்பாகக் கிடைத்த அன்றைய மொழியியல் அறிவால், தன்னுடைய இந்த நூலில் மரபிலக்கணங்கள் சொல்லும் முறையைச் சற்று மாற்றி உரைத்துள்ளார். தற்கால இலக்கண நோக்கில் இதைப் பார்க்கும்பொழுது, அவ்வாறு மாற்றியமையை நூலின் சிறப்பாகக் கொள்ளலாம்.

சான்றாக: மரபுப்படி, எழுத்திலக்கணத்தில் உரைக்கவேண்டிய, 'பெயர் + சாரியை + வேற்றுமைஉருபு' என்ற புணர்ச்சி இலக்கணத்தை, இவர் சொல் இலக்கணத்தில், வேற்றுமைகளுக்கு அடுத்தபடியாகக் கூறியுள்ளார்[3]. ஏனென்றால், ஒருவர் வேற்றுமைகளைக் கற்காமல், வேற்றுமைகளால் உண்டாகும் சாரியைகளைத் தெரிந்துகொள்வது பயனன்று என்பதால். 'தொடர்களுக்குப்பின் சொல்வகைப்பாடு, சொல்வகைப்பாட்டிற்குப் பின் சொற்புணர்ச்சி[4]' என்று அமையும் தற்கால இலக்கணநோக்கில், போப்பின் இவ்விலக்கண வைப்புமுறை சரியானது.

19ஆம் நூற்றாண்டின் தமிழ் இலக்கண மாற்றங்களையும் இந்நூலால் அறிந்துகொள்கிறோம். சான்றாக: நன்னூல் காலத்தில் இருந்த 'செயின்' வாய்பாட்டு வினையெச்சம், போப் காலத்திலேயே 'செய்தால்' வாய்பாடு ஆகியுள்ளது[5].




Arimaa Nokku

# அரிமா நோக்கு

17 : 3 அக்டோபர் 2023

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

ISSN 2320-4842

# கருவரையான்



**முதுமுனைவர் வா. வினோத்**
உதவிப் பேராசிரியர். தமிழ்த் துறை. தாகூர் கலை அறிவியல் கல்லூரி. புதுச்சேரி

இந்தக் கட்டுரையை எழுதுவதற்குமுன், 'முனைவர் பட்டத்துக்காகத் திருமந்திரத்தில் இலக்கணம் தொடர்பான ஆய்வை மேற்கொள்ளலாமா?' என்று நான் என் மூத்த ஆய்வாளர்களைக் கேட்ட நினைவு வந்தது. 'திருமந்திரத்தில் உள்ள சொற்கள் பெரும்பாலும் சேர்த்தும் பிரித்தும் பொருள்களைக் கொடுக்கக்கூடியன; எனவே, சொல் இலக்கணம் சார்ந்த திருமந்திர ஆய்வு சிக்கலானது' என்று கூறினார்கள். எதைச் செய்யக்கூடாது என்று அறிவுறுத்துகிறார்களோ அதைச் செய்வதுதானே நம் பழக்கம்! எனவே, 'திருமந்திரத்தில் வினைச்சொற்கள்' என்ற தலைப்பில் என் ஆய்வை மேற்கொண்டு, மிகவும் அல்லல் பட்டேன்.

தற்போதுள்ள சிறிது அறிவு வளர்ச்சியுடன் திருமந்திரப் பாடல்கள் சிலவற்றை மீண்டும் வாசிக்கையில், என் மூத்த ஆய்வாளர்கள் கூறிய, சொற்பொருள் தொடர்பான சிக்கலுக்குச் சில வழிமுறைகள் தோன்றுகின்றன. அது தொடர்பானதே இந்தக் கட்டுரை.

*வானவர் தம்மை வலி செய்திருக்கின்ற*
*தானவர் முப்புரம் சென்ற தலைவனை*
*கானவன் என்றும் கருவரையான் என்றும்*
*ஊன் அதன் உள்புகுந்து ஒன்றுபட்டாரே*

**பொழிப்புரை:** தேவர்களைத் துன்புறுத்திய அசுரர்களது மூன்று கோட்டைகளைத் தன் சிரிப்பினாலே ஒரு நொடியில் சாம்பலாக்கி அழித்த தலைவன் சிவன். அவனைச் சிலர், `காட்டிலே ஆடுபவன்` என்றும், `கரிய மலையில் வாழ்பவன்` என்றும் தங்கள் ஊன் உடம்பின் உள்ளுக்குள்ளாகவே இகழ்ந்து, அவனைக்கூடார் ஆயினார்.

**குறிப்புரை:** `ஒன்றுபட்டார்` என்பது பாடமாயின், `அவனது பெருமையை உணர்வினால் உணர்ந்து, அகமாகிய உள்ளத்துள் தியானித்துச் சமாதிநிலை கூடினர்` என உரைக்க. சிவன் இருப்பது வெள்ளிமலையாயினும், முகில்கள் தவழ்தலும், பசுமை படர்ந்திருத்தலும் பற்றி, `கருவரையான்` என்றார். `ஒன்றுபட்டார்` என்பதையே பாடமாகக் கொள்வார், `கரு - பிறப்பை, வரையான் - ஏற்காதவன்` என உரைப்பர்.

இதனால், உண்மை உணராதார் பத்திசெய்து பயன்றும் இடம் அறியாமை கூறப்பட்டது[1].

**கருவரையான் - பொருள்கள்**

இப்பாடலில் 'கருவரையான்' என்ற சொல்லுக்குக் கொடுக்கப்படும் பொருள்களை இக்கட்டுரை ஆய்கிறது. பாட்டின் பொழிப்புரைப்படி, 'கருவரையான்' என்ற சொல்லுக்குக் 'கறுப்பு மலைகளில் வசிப்பவன்' என்ற பொருள் கிடைக்கின்றது. சிவனின் தோற்றமும் உறைவிடமும் கைலாயம் என்ற வெள்ளிப்பனிமலை என்பது சைவர்களின் பொதுவான நம்பிக்கை[2]. இதை, கி.பி ஐந்தாம் நூற்றாண்டுக்கு மேலானது எனக் கருதப்படும் திருமந்திரமும் 'கையிலை வழியில் வந்தேனே' எனக் கூறுகிறது[3]. இவ்வாறு இருக்க, 'கருவரையான்' என்ற சொல்லைத் திருமூலர் பயன்படுத்தக் காரணம், அச்சொல் அவருடைய காலத்தில் ஒரு குறிப்பிட்ட வழக்குச் சொல்லாக இருந்திருக்கலாம்; அதை அவர் இப்பாடலில் மேற்கோளாகக் கையாண்டிருக்கிறார்.

**கருவரையான் - சொற்புணர்ச்சி**

கருமை + வரை + ஆன்

பண்புத்தொகை கொண்ட ஒரு தொகைச்சொல்லும் (கருவரை) படர்க்கை ஆண்பால் விகுதியும் (ஆன்) இணைந்து கருவரையான் என்ற சொல் உருவாகி உள்ளது. பொழிப்புரையின் பொருளின்படி அது இடப் பொருளை அடிப்படையாகக் கொண்ட குறிப்புவினையாக அமைகின்றது[4]. 'வரை' என்ற சொல்லுக்குக் கொடுக்கப்பட்ட பதினெட்டுப் பொருள்களுள் ஆறா வது பொருள் 'மலை' என்ற பொருள் ஆகும். 'கரு' என்ற சொல்லுக்கு முதல் பொருளே 'கறுப்பு' என் பதுதான்[5]. இதன்படி, கருவரையான் என்பதற்குப் பொழிப்



(LTI of Dr. VINOTH.V)

# தமிழர் மாண்பு

**தேசிய ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரைகள்**


**நூல் தொகுப்பு**
பாவலர் ஆறு.செல்வன்

**பதிப்பாசிரியர்**
முனைவர் ஆ.விஜயராணி

**துணைப்பதிப்பாசிரியர்கள்**
பேராசிரியர் க.கிருஷ்ணம்மாள்
முனைவர் அண்ணா.ஜெகன்



**வெளியீடு**

**புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்**

**எண் 4, காமராசர் தெரு, வி.பி. சிங் நகர்,**
**சண்முகாபுரம், புதுச்சேரி - 605 009**

# நூற்குறிப்பு


- நூல் : தமிழர் மாண்பு
- மொழி : தமிழ்
- வகை : கட்டுரை
- நூல் தொகுப்பு : பாவலர் ஆறு.செல்வன்
  9894755985
- பதிப்பாசிரியர் : முனைவர் ஆ.விஜயராணி
- துணைப்பதிப்பாசிரியர்கள் : பேராசிரியர் க.கிருஷ்ணம்மாள்
  முனைவர் அண்ணா. ஜெகன்
- முதல் பதிப்பு : 25.09. 2022
- வெளியீடு : புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்
- உரிமை : வெளியீட்டாளருக்கு
- நூலின்அளவு : 1/8 demi
- பக்கம் : 318
- தாள் : மேப்லித்தோ N.S. - 70 G.S.M.
- மேல் அட்டை : பல்வண்ண அட்டை - 300 G.S.M.
- மேல்அட்டை வடிவமைப்பு : ஜெயக்குமார்
- நூல் வடிவமைப்பு : க.சரவணன்

அச்சாக்கம் : யோகி பதிப்பகம்.
65.,4வது குறுக்குத்தெரு, சக்திநகர்
புதுச்சேரி -13 பேசி : 99947 25888

- ISBN No. : 978-81-954810-3-3
- விலை : உருபாய் 500/-

43. தமிழ் இலக்கியங்கள் - தமிழ்ச் சமூகமும் நீரும்
முனைவர். ந.மோகன்ராஜ்
44. செந்தமிழ் செல்வன் சுந்தரனாரின் தமிழ் இலக்கிய
கல்வெட்டு ஆய்வு முடிவுகள் - பேராசிரியர்
முனைவர் சு. மோதிலால் நேரு
45. சிறுபாணாற்றுப்படையில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் கா. ராஜகுமாரி
46. சங்கத் தமிழர் விளையாட்டும் பொழுதுபோக்கும்
முனைவர் க.ரேவதி
47. செம்மொழி இலக்கியங்களில் காணலாகும்
அறிவியல் சிந்தனைகள் - முனைவர். க.லெட்சுமி
48. சங்க இலக்கியத்தில் ஊழ்
முனைவர் வா. வினோத்
49. திருக்குறளில் தமிழர்தம் விழுமியங்கள்
முனைவர் ஆ.விஜயராணி
50. அறிவியலில் தமிழனின் தொன்மை
பாவலர் வ. விஜயலட்சுமி
51. ஐஞ்சிறு காப்பியங்களில் அணிநலம்
முனைவர் கோ. வெற்றிச்செல்வி
52. திருக்குறள் உணர்த்தும் சிறந்த பண்புகளே,
மனிதனை பெருமைப்பட வாழவைப்பவை
முனைவர் அண்ணா. ஜெகன்
53. விருந்தோம்பலில் தமிழனின் மாண்பு
முனைவர் வெ. ஜெயந்தி வேல்முருகன்

# சங்க இலக்கியத்தில் ஊழ்



**முனைவர் வினோத் வா.,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தாகூர் அரசு கலை அறிவியல் கல்லூரி,
புதுச்சேரி – 605008.

திருக்குறளில் ஊழுக்குத் தனி அதிகாரம் உள்ளது. அதே திருக்குறள் 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்றும் கூறியுள்ளது. சிலப்பதிகாரம் கூறிய 'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்' என்ற கருத்து இன்றுவரை பொதுமக்களிடம் ஆழமாக வேரூன்றி உள்ளது. ஊழானது முற்பிறவிப்பயன், தலையெழுத்து, விதி, அதிர்ஷ்டம், நேரம் என்ற பல சொற்களால் மக்களிடம் புழங்குகின்றது. எனவே, ஊழ் அல்லது ஊழ்வினை என்று சொல்லப்படும் கோட்பாடு பழந்தமிழர் காலத்தில் எவ்வாறு மலர்ந்திருக்கக்கூடும் என்ற கேள்வியிலிருந்து இக்கட்டுரை அமைகின்றது.

பழந்தமிழர் என்றால் சங்க இலக்கியமே அடிப்படையான தரவகம். சங்க இலக்கியத்தில் உள்ள ஊழ் என்ற சொல்லின் பயன்பாட்டுப் பொருள்களை, இக்கட்டுரை சுட்டிக்காட்டி, அதன்பின் ஊழ் என்ற கோட்பாட்டு வளர்ச்சியைப் புரிந்துகொள்ள முயல்கின்றது.

**ஊழ் – முறைமைப் பொருள்**

சங்க இலக்கியத்தில் வரும் ஊழ் என்ற சொல் பெரும்பாலும் 'முறை, ஒழுங்கு, நேரான தன்மை' என்ற பொருள்களில் கையாளப்படுகின்றது.

**கிளிகடி மரபின ஊழ்ஊழ் வாங்கி** குறி. 44

பொருள்: கிளியை ஓட்டும் மரபினை உடைய கருவிகளை (தழல், தட்டை, குளிறு) முறைமுறையே கையில் வாங்கிக்கொண்டு

**இகந்து சேண் கமழும் பூவும் உண்டோர்**
**மறந்து அமைகல்லாப் பழனும் ஊழ் இறந்து,**
**பெரும்பயம் கழியினும் மாந்தர் துன்னார்**

மலை. 262-264